செ. கு. எண்: 139 நாள்: 19.09.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 19.9.2016

அற நெறியையும், ஆன்மீக உணர்வையும், ஒழுக்கத்தின் மேன்மையையும் வளர்ப்பதோடு மட்டுமின்றி, புகழ் வாய்ந்த பழைய பண்பாட்டுப் பாரம்பரியத்தை மக்களுக்கு எடுத்துரைக்கும் பொக்கிஷங்களாகவும் விளங்கும் திருக்கோயில்களில் திருப்பணிகளை மேற்கொள்வது, அன்றாட பூஜைகள் தங்கு தடையின்றி நடப்பதை உறுதி செய்வது, ஆக்கிரமிப்பில் உள்ள திருக்கோயில்களின் சொத்துகளை மீட்டு அவற்றின் வருவாயைப் பெருக்குவது, பக்தர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பது போன்ற பணிகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இந்து சமய அறநிலையங்கள் துறையின் மூலம் பின்வரும் திட்டங்களை செயல்படுத்த நான் உத்தரவிட்டுள்ளேன்.

**1.** தமிழக திருக்கோயில்கள் மனித வாழ்வின் எல்லா செயல்பாடுகளுக்குமான மையமாக தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளன. சிற்பிகள், ஸ்தபதிகள், கட்டுமானப் பணியாளர்கள், மரத்தச்சர், உலோக சிற்பிகள், கைவினைஞர்கள், கட்டட வல்லுநர்கள், நெசவாளர்கள், பொற்கொல்லர்கள், அர்ச்சகர்கள், கிராமக் கோயில் பூசாரிகள், இசைவாணர்கள், நடனக் கலைஞர்கள், நாதஸ்வரக் கலைஞர்கள், பூஜை பொருள் விற்பனையாளர்கள், பூமாலைக்கட்டி, நந்தவனம் காப்போர், பரிசாரகர்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள், ஓவியக் கலைஞர்கள், சமய சொற்பொழிவாளர்கள் என திருக்கோயில்களுக்கும் பக்தர்களுக்கும் சேவையை வழங்குவோர் பலவகையினர் உள்ளனர். காலப்போக்கில் போதிய அளவு ஆதரவு இல்லாமல் போனதால் இவர்களில் பலரும் நலிவடைந்து அவர்களிடமிருந்த மதிப்புமிக்க திறன்களும் மறைந்து போகும் நிலையில் உள்ளன. இவர்களின் வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தி, இவர்களுடைய திறன், வடிவமைப்பு தொழில்நுட்பம் ஆகியவற்றை மேம்படுத்த திட்டம் ஒன்றினை செயல்படுத்த நான் உத்தரவிட்டுள்ளேன். இது 5 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

**2.** தமிழ்நாட்டில் உள்ள தொன்மையான திருக்கோயில்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வடிவமைக்கப்பட்ட விலை மதிப்பற்ற உலோக விக்கிரகங்கள், கற்சிலைகள் மற்றும் நிலம், கட்டடம் போன்ற அசையா சொத்துகளும் உள்ளன. இவை பற்றிய தகவல் தொகுப்பு ஒன்றினை உருவாக்க நான் உத்தரவிட்டுள்ளேன். அனைத்து விவரங்களும் கணினிமயமாக்கப்பட்டு திருக்கோயில்களுக்கான தகவல் தொகுப்பு உருவாக்கப்படும். திருக்கோயில் சொத்துகளின் அமைவிடங்கள் புவியியல் தகவல் முறைமை (GIS) மூலம் எளிதாக அறியும் வகையில் வரைபடங்களில் குறிப்பிடப்பெறும். புவியிடங்காட்டி (GPS) மூலம் திருக்கோயில் சொத்துகள் முறையாக அளவை செய்து ஆவணப்படுத்தப்படும். திருக்கோயில்களில் இணையதள சேவை மூலம் அறை ஒதுக்கீடு, தங்கத்தேர், அன்னதான நன்கொடை போன்ற சேவைகளோடு, கூடுதல் சேவைகளைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், கைபேசி குறுஞ்செயலி மூலமாக இத்தகைய வசதிகளைப் பெறுவதற்கும், திருக்கோயில்கள் பற்றிய முழுமையான தகவல்களைப் பெற படிப்படியாக அவற்றிற்கு வலைதளங்களை உருவாக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நிறுவன வளம் திட்டமிடல் (Enterprise Resource Planning) மூலம் திருக்கோயில்களின் நிர்வாகத்தை மேம்படுத்த தனியே மென்பொருள் தயாரிக்கப்படும். இவை 1 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

**3.** தமிழகத் திருக்கோயில் நிகழ்வுகளை ஆவணப்படுத்தி படங்கள், காணொலிகள், பின்னணி இசை கொண்ட பல்லூடக (Multimedia) வசதியுடனான ஒரு நவீன இணையதளம் வடிவமைக்கப்படும். இப்பணி 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**4.** திருக்கோயில்களில் நிதி பற்றாக்குறை காரணமாக தினசரி ஒரு வேளை கூட பூஜை நடைபெறாத திருக்கோயில்களில் ஒரு கால பூஜையாவது நடைபெற வேண்டுமென்ற நோக்கில் "ஒரு கால பூஜை வைப்புநிதி திட்டம்" ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தினை நிரந்தர அடிப்படையில் செயல்படுத்தும் நோக்கில் 1993-ஆம் ஆண்டு முதல் பொதுமக்களையும் இணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், தற்போது 12,504 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. இந்த ஆண்டு, மேலும் 241 திருக்கோயில்களுக்கு இத்திட்டத்தினை விரிவுபடுத்த நான் உத்தரவிட்டுள்ளேன். இதற்கென பக்தர்கள் பங்கீடு 24 லட்சத்து 10 ஆயிரம் ரூபாயுடன் துறை பங்கீடாக 2 கோடியே 16 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 2 கோடியே 41 லட்சம் ரூபாய் செலவிடப்படும்.

**5.** சிறிய திருக்கோயில்களில் காலபூஜை முறையாக நடைபெற தேவையான பூஜை உபகரணங்கள் இல்லாததைக் கருத்தில் கொண்டு, கடந்த ஆண்டு 10,000 திருக்கோயில்களுக்கு 2 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பில் பூஜை பொருட்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து இந்த ஆண்டு, மேலும் 10,000 சிறிய திருக்கோயில்களில் முறையான பூஜை செய்திட ஏதுவாக பித்தளை தாம்பாளம், தூபக்கால், மணி, விளக்கு மற்றும் தொங்கு விளக்கு ஆகியவற்றை வாங்கி வழங்கிட நான் உத்தரவிட்டுள்ளேன். இதற்கென 2 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

**6.** சேலம் மாவட்டம், கோட்டை, அருள்மிகு அழகிரிநாதசுவாமி திருக்கோயில், நாகப்பட்டினம் மாவட்டம், சிக்கல், அருள்மிகு நவநீதேஸ்வரசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் 63 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிதிலமடைந்த மரத்தேர்களுக்கு பதிலாக புதிய மரத்தேர்கள் செய்யப்படும். மேலும், திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் 31 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம் சத்திய விஜய நகர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில் 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் புதிய மரத்தேர்கள் செய்யப்படும்.

**7.** கடலூர் மாவட்டம், பெண்ணாடம், அருள்மிகு பிரளயகாலேஸ்வரர் திருக்கோயில், மதுரை மாவட்டம், தல்லாகுளம் அருள்மிகு அய்யப்பன் திருக்கோயில், கோவை மாவட்டம், உக்கடம், அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம், அருள்மிகு பூவராகவசுவாமி திருக்கோயில் உள்ளிட்ட திருக்கோயில்களில் 2 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அன்னதானக் கூடங்கள் கட்டப்படும்.

**8.** திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, மேட்டுத்திடல், சுவாமி நெல்லையப்பர் அன்பு ஆஸ்ரமத்திற்கு 3,634 சதுர அடி பரப்பளவில் கூடுதல் வகுப்பறைகள் 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படுவதற்கும், திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை, அருள்மிகு பெரியநாயகியம்மன் மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய அறிவியல் ஆய்வகக் கட்டடம், 6 வகுப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர் 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படுவதற்கும், திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரியின் மேம்பாட்டு பணிகளை 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

**9.** தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், குச்சனூர், அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயிலில் 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மகா மண்டபம் கட்டப்படும்.

**10.** நாகப்பட்டினம் மாவட்டம், எட்டுக்குடி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் **95** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக திருமண மண்டபம் கட்டப்படும். திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை, அருள்மிகு நல்லாண்டவர் திருக்கோயில், திருப்பைஞ்ஞீலி, அருள்மிகு ஞீலிவனேஸ்வரர் திருக்கோயில், விருதுநகர் மாவட்டம், செண்பகத்தோப்பு அருள்மிகு பேச்சியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் **57** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சேவார்த்திகள் மண்டபம், பொருட்கள் பாதுகாப்பு அறை, திருநெல்வேலி மாவட்டம், பண்பொழி, அருள்மிகு ஸ்ரீ திருமலைக்குமாரசுவாமி திருக்கோயிலில் பக்தர்கள் வசதிக்கென **60** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் ஓய்வுக்கூடம் ஆகியவை கட்டப்படும்.

**11.** இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தற்போது மாதம் 1,000/– ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஓய்வூதியதாரர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க ஓய்வூதியதாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே, திருக்கோயில் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள இவர்களது குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு தற்போது வழங்கப்பட்டு வரும் துறை நிலையிலான மாத ஓய்வூதியம் 1,000/–ரூபாயிலிருந்து 2,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் 3,700 ஓய்வூதியதாரர்கள் பயன் பெறுவர். இதற்கான ஆண்டு கூடுதல் செலவினம் 4 கோடியே 44 லட்சம் ரூபாய் ஆகும்.

இந்த நடவடிக்கைகள் திருக்கோயில்கள் மேலும் சிறப்புறவும், பக்தர்களுக்கு கூடுதல் வசதிகள் கிடைக்கவும் வழி வகுக்கும்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**